## நோய்க்கு வேட்டு, மகசூலுக்குக் கூட்டு.. பட்டையைக் கிளப்பும் பீஜாமிர்தம்!

## 10.10.2012



சாகுபடி செய்யப்படும் பயிர்களுக்கு ஊட்டம் கொடுப்பது எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் பூச்சி – நோய் தாக்குதலில் இருந்து வருமுன் காப்பதும்! அந்த வகையில் ‘ஜீரோ பட்ஜெட் ’ பயிர்களை நோய் தாக்குதல் பிரச்னைகளில் இருந்து காத்து வருவது.. பீஜாமிர்தம்தான்! ஜீரோ பட்ஜெட் பிதாமகர் சுபாஷ் பாலேக்கரின் கண்டுபிடிப்புகளில் ஒன்றான இந்த பீஜாமிர்தத்தை தனது வயலில் பயன்படுத்தி நல்ல முறையில் மகசூல் எடுத்து வருகிறார். பெரம்பலூர் மாவட்டம், செங்குணம் கிரமத்தைச் சேர்ந்த ராமகிருஷ்ணன். நான் ஐந்து வருடமாக ஜீரோ பட்ஜெட் முறையில்தான் விவசாயம் செய்கிறேன். நெல், மஞ்சள், கரணக்கிழங்கு, தட்டப்பயிறு, உளுந்து, நிலக்கடலை, சம்பங்கி என்று அந்தந்தப் பருவத்திற்கு ஏற்ற பயிர்களை மாற்றி மாற்றி சாகுபடி செய்வேன். எந்த சாகுபடியாக இருந்தாலும், விதையை பீஜாமிர்தத்தில் விதை நேர்த்தி செய்யாமல் விதைக்கமாட்டேன்.

வழக்கமாக.. கடைகளில் வாங்கும் விதையில் ‘ரசயானப் பூஞ்சணக் கொல்லி’களைப் பயன்படுத்தி விதைநேர்த்தி செய்திருப்பாங்க. அதை விதைத்தால் நன்மை தரும் நுண்ணுயிரிகள் அழிந்துவிடும். ஆனால், பீஜாமிர்தத்தில் விதைநேர்த்தி செய்தால்... இந்தப் பிரச்னை இருக்காது. விதைகளுடைய முளைக்கும் திறனும் அதிகரிக்கும். வேர் அழுகல் நோய், வாடல் நோய்களை உண்டாக்கும் பூஞ்சணம் மற்றும் பாக்டீரியாக்கள் அழிந்து போகும். அதனால், பூச்சி – நோய் தாக்குதல் குறைவதுடன் மகசூலும் கூடுகிறது என்று பீஜாமிர்தத்தின் பெருமையை முன்னுரையாகக் கொடுத்தார் ராமகிருஷ்ணன்.

**இப்படித்தான் தயாரிக்க வேண்டும்!**

தண்ணீர் – 20 லிட்டர், நாட்டுப் பசுஞ்சாணம் – 5 கிலோ, நாட்டுப் பசு சிறுநீர் – 5 லிட்டர், நல்ல நுண்ணுயிரிகள் இருக்கும் வளமான மண் ஒரு கைப்பிடி அளவு ஆகியவற்றை எடுத்து.. ஒன்றாகச் சேர்த்து நன்றாகக் கலக்க வேண்டும். மாலை 6 மணி முதல் மறுநாள் காலை 6 மணி வரை நன்றாக

(12 மணிநேரம்) ஊறவிட்டு.. அதில் 50 கிராம் சுத்தமான சுண்ணாம்பைக் கரைத்தால்.. பீஜாமிர்தம் தயார். இக்கரைசலில் விதையை நனையவிட்டு விதைக்க வேண்டும். இக்கரைசலைத் தயாரித்த பின், சுமார் 48 மணி நேரம் வரை வைத்திருந்து பயன்படுத்தலாம். அதற்கு மேல் இதன் வீரியம் குறைந்துவிடும். கடைகளில் வாங்கிய விதைகளாக இருந்தால்.. அவற்றை நன்றாக தண்ணீரில் கழுவி விட்டுத்தான் பீஜாமிர்தத்தில் விதைநேர்த்தி செய்ய வேண்டும்.

**தோல் உரியும் விதைகள் எச்சரிக்கை !**

உளுந்து, கடலை, பாசிப்பயறு போன்ற தோல் உரியும் விதைகளாக இருந்தால், அவற்றின் மீது பீஜாமிர்தத்தை நன்றாகத் தெளித்து, லேசாக உலரச் செய்து விதைக்கலாம். கத்திரி, தக்காளி, நெல் போன்ற நாற்றுகளின் வேர் பகுதியை பீஜாமிர்தக் கரைசலில் நனைத்து நடவு செய்யலாம். மஞ்சள், கருணைக்கிழங்கு, கரும்புக் கரணைகள் போன்றவற்றை ஒரு மூங்கில் கூடையில் வைத்து... பீஜாமிர்தம் நிறைந்த பாத்திரத்தில் அமிழ்த்தி எடுத்து நடவு செய்யலாம். மரப்பயிர்களுக்கு போத்து நடவு செய்யும் போதும், பீஜாமிர்தக் கரைசலுக்குள் முக்கியெடுத்து நடவு செய்தால், நன்கு முளைத்து வரும். கீரை போன்ற மிக சிறிய விதைகளை கரைசலில் முக்கி எடுப்பதை விட, அந்த விதைகளை சுத்தமான தரையில் பரப்பி, அதன் மீது பீஜாமிர்தக் கரைசலைத் தெளித்து விடுவது எளிதாக இருக்கும். பெரிய கன்றுகள், நாற்றுகளை நேர்த்தி செய்யும் போது.. தேவையான அளவு தண்ணீரை மட்டும் கூட்டிக் கொள்ளலாம்.

**தொடர்புக்கு**
**ராமகிருஷ்ணன், செல்போன் : 94439 – 54642.**